மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.111/2023</u>

2025ம் ஆண்டு அக்டோபர் 28ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகராஜன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>28.10.2025 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்தானது ரீ.ச.எண்.1766/19 இல் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் 1983 கிரையத்தின் அடிப்படையில் ஒரு ராஜரத்தினம் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் ஐந்து சென்ட் என்றால் சரிதான். தாவா சொத்தில் மொத்தம் ஆறு வீடுகள் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள 6 வீடுகளுக்கும் தனித்தனியாக மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அந்த 6 வீடுகளையும் ராஜரத்தினமும் அவரது மனைவியும் கட்டி அதில் ஒரு வீட்டில் குடியிருந்து கொண்டு மற்ற வீடுகளை வாடகைக்கு விட்டு அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

ராஜரத்தினம் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர் என்றால் சரிதான். அவர் இறக்கும் வரை அவருக்கு ஓய்வூதிய பணம் வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். அதுமட்டுமில்லாமல் ஐந்து வீடுகளில் வாடகையும் அவர்களுக்கு வருமானமாக வந்தது என்றால் சரிதான் ராஜரத்தினம் மற்றும் அவரது மனைவியும் மரகதம் ஆகியோர்களுக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்றால் சரிதான் ராஜரத்தினத்தின் சகோதரி பெயர் நாச்சம்மாள் என்றால் சரிதான்.

3. நாச்சம்மாள் வெள்ளகோவிலுக்கு அருகில் உள்ள வள்ளியரச்சல் கணபதி பாளையத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். ராஜரத்தினத்தின் உடன் பிறந்த சகோதரர் ஒருவர் பெயர் சின்ன குட்டி என்கிற சிகாமணி என்றால் சரிதான். அவர் திண்டுக்கல் மாவட்டம், சத்திரப்பட்டியில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான் வெள்ளகோவில் பக்கத்தில் நாச்சம்மாளை தவிர வேறு உறவுகள் அருகில் குடியிருக்க வில்லை என்றால் சரிதான். ராஜரத்தினமும் அவரது மனைவியும் நல்ல நிலையில் இருந்த போது தான் கடந்த 26.02.2015 அன்று ஒரு உயில் சாசனத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் அப்போது என் பெரியம்மாள் மரகதம் மனநிலை பாதிக்கப்பட்டு இருந்தார். ராஜரத்தினம் நல்ல நிலையில் இருந்தார் என்றால் சரிதான்.

4. 26.02.2015 தேதியில் ஏற்படுத்தப்பட்ட உயில் சாசனத்தில் 1 முதல் 3 வாதிகளுக்கும் மற்றும் 1ம் பிரதிவாதி செல்லம்மாள் சிகாமணியின் வளர்ப்பு மகன் சரவணன் ஆகியோர்களுக்கு தாவா சொத்தில் இருந்த ஆறு வீடுகளையும் பொறுத்து பிரித்து உயில் சாசனம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான் 26.02.2015 தேதியில் தாவா சொத்துக்களை பொறுத்து தனித்தனியாக ஆறு உயில் சாசனங்கள் எழுதப்பட்டது

என்றால் சரிதான். மேற்படி ஆறு உயில் சாசனங்களிலும்மேற்படி ஆறு உயில் சாசனங்களிலும் அதில் கண்டுள்ள சொத்துக்களுக்கு விஸ்தீரணம் மற்றும் தனித்தனியான செக்குபந்தி கண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான்.

5. மேற்படி உயில் சாசனங்கள் ஏற்படுத்தப்பட்ட தேதியில் ராஜரத்தினம் என்பவரின் மனைவியான மரகதம் என்பவர் நல்ல மனநிலையிலும் உடல் நிலையிலும் இருந்தார் என்றும் நான் வழக்கிற்காக அவருக்கு மனநிலை சரியில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மரகதம் மேற்படி உயில் சாசனம் ஏற்படுத்தப்பட்ட தேதியில் நல்ல மனநிலையில் இல்லை என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இதுவரை தாக்கல் செய்யவில்லை அந்த ஆவணங்களை நான் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.28 18:51:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்